# பஞ்சாலை நிலங்களை சூறையாட வழிவகுத்திடும் நாசகரத்திட்டத்தைக் கைவிடுக

புதுச்சேரி வரலாற்றில் சுமார் 200 ஆண்டு காலம் மக்களின் வாழ்வியல், பொருளியல் மற்றும் பண்பாட்டுடன் பிண்ணிப் பிணைந்த தொழில்களாக பஞ்சாலைகள் இருந்துவந்தன.

சுதேசி, பாரதி, ரோடியர் பஞ்சாலைகளின் நிலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா அமைத்து புதிய வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு என்.ஆர். காங்கிரஸ்-பாஜக கூட்டணி அரசு சிந்திக்கவில்லை. மாறாக பஞ்சாலைகளின் சொத்துக்களை கூட்டுக்கொள்ளை அடிக்க வழிவகுக்கும் நாசகரத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிக்கும் என்.ஆர். காங்கிரஸ்-பாஜக கூட்டணி அரசின் மோசடித் திட்டத்தை சிஐடியூ கடுமையாக எதிர்க்கிறது.

புதுச்சேரி முதல்வர் திரு.ந. ரங்கசாமி அவர்கள் 2024-2025 நிதியாண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கையாக முன்மொழிந்து பேசினார். அதில் காலியாக உள்ள அரசுத்துறை நிறுவனங்களின் நிலங்களை தொழில் மேம்பாடு மற்றும் வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், உலகளாவிய ஆராய்ச்சி, கைவினை முனையங்கள், நிதி தொழில்நுட்ப முனையங்கள் ஆகியவை ஏற்படுத்தப்படும். படித்த தொழில்நுட்ப திறன் கொண்ட புதுச்சேரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது. இது என்.ஆர்.காங்கிரஸ் பாஜக கூட்டணி அரசின் உள்நோக்கம் கொண்ட மோசடித்திட்டமாகும்.

புதுச்சேரி மாநிலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூட்டம் நடத்தியும் புதிய தொழில்கள் வரவில்லை. வேலைவாய்ப்பு உருவாகவில்லை. தொழில் வளர்ச்சிக்காக 2000ல் கரசூரில் எடுக்கப்பட்ட 850ஏக்கர் நிலம், சேதராப்பட்டு மற்றும் காரைக்கால் போலகத்தில் எடுக்கப்பட்ட நிலங்கள் கரம்பாக உள்ளன. புதுச்சேரி தொழிற்சாலைகளில் புதுச்சேரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை இல்லை. குறைந்தபட்ச கூலியும் இல்லை. பெஸ்ட் (BEST) புதுச்சேரியாக மாற்றப்பட்ம் என்ற மோடியின் அறிவிப்பு தொழில் வளர்ச்சிக்கு உகந்த அடிப்படை கூட்டமைப்புகளை, புதிய தொழில்களை கொண்டுவரவில்லை.

30.12.2003ள் உலக வர்த்தக அமைப்பு அதிகாரிகள் தொழில்துறை அமைச்சர் திரு.அ.நமச்சிவாயம் அவர்களை சந்தித்து பேசியுள்ளனர். அதனைத் தொடர்ந்து WTOக்கு நிலம் வழங்க பரிசீலிக்கப்படும். இதனால் உலக ஆராய்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் உதவிடும் என செய்தி ஊடகங்களுக்கு பேட்டியளித்த்தார். இதில் சிறிதளவும் உண்மையில்லை. மாறாக உலக நாடுகளுக்கிடையில் வர்த்தக விதிகளை வகுப்பதும், கண்காணித்து முறைப்படுத்துவது அதன் நோக்கமாகும். மேலும் அவ்வாறான விதிகள் ஏகாதிபத்திய நாடுகளுக்கு உகந்ததாகவே இருந்துவருகிறது.

ஏகாதிபத்திய நாடுகள் 1935ல் உருவான உலகப் பொருளாதார நெருக்கடியால் உலகத்தை மறுபங்கீடு செய்து கொள்ள இரண்டாம் உலக மகா யுத்தத்தை தொடர்ந்தன. சோவியத் யூனியன் செம்படையின் உறுதிமிக்கப் போராட்டத்தால் 1945ல் யுத்தம் முடிவுக்கு வந்தன. அதனைத் தொடர்ந்து காட் என்ற உலக பொது வர்த்தக அமைப்பு உருவானது. அதன் மறுவடிவமாக உலக வர்த்தக் அமைப்பு (WTO) உருவானது. இதன் நோக்கம் ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏதுவான வர்த்தக விதிகளை உருவாக்குவது என்பது தான். WTO அமைப்பில் புதிய வேலைவாய்ப்புகளுக்கு வாய்ப்பில்லை என்றாலும் பிரஞ்சிந்திய விடுதலைப் போராட்டம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடையாளமாக திகழும் பஞ்சாலை நிலங்களில் WTO அமைப்புக்கு இடம் அளிக்கப்படக் கூடாது என சிஐடியூ வலியுறுத்துகிறது.

புதுச்சேரி மாநிலத்தின் புதிய வேலைவாய்ப்புகளுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் உதவக்கூடியது பஞ்சாலைத் தொழில்களாகும். நகர்புற மற்றும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்கும் ஏராளமான புதிய வேலைவாய்ப்புகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் உருவாக்கிவிடும். ஆகவே, சுதேசி, ரோடியர், பாரதி பஞ்சாலை நிலங்களில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டம் உருவாக்க வேண்டும். ஒன்றிய ஜவுளித்துறையிடமிருந்து பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் கீழ் ஜவுளிப் பூங்கா அமைத்திட மாநில அரசு திட்டம் தயாரித்து நிதி வழங்கப்பெற்று பஞ்சாலைகளை செயல்படுத்திட வேண்டும் என புதுச்சேரி மில் தொழிலாளர் சங்கம் மாநில அரசை வலியுறுத்துகிறது. உடனடியாக இயங்க வாய்ப்புள்ள திருபுவனை கூட்டுறவு நூற்பாலை மற்றும் காரைக்கால் ஜெயப்பிரகாஷ் நாராயண் நூற்பாலை ஆகியவற்றை அரசின் நேரடிப் பொறுப்பில் முழு வீச்சில் செயல்படுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்

(ஜெ. குணசேகரன் }
தலைவர்